




சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கம் (Game Developers Association of India) மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை (ELCOT) இணைந்து நடத்தும் 17ஆவது இந்திய கேம் டெவலப்பர்ஸ் 2025 (IGDC 2025) மாநாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (6.11.2025) தமிழ்நாடு அரசின் எல்காட் நிறுவனத்திற்கும் லக்சயா டிஜிட்டல் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன், இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கத்தின் நிர்வாகி ஸ்ரீதர் முப்பிடி, லக்சயா டிஜிட்டல் நிறுவனத்தின் மன்வேந்ரா சுக்குல் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர், நவ. 8-

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர்-அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (09.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணி அளவில் RM Guest House, காக்களூரில் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜெயசீலன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில தொழிலாளர் அணிச் செயலாளர் பூவிருந்தவல்லி தொகுதி பார்வையாளர் PTC செல்வராஜ், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் ஆவடி தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ. சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்டப் பொருளாளர் பா.நரேஷ்குமார் பொதுக் குழு உறுப்பினர்கள் த. எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்ச்செல்வன், காஞ்சனா சுதாகர், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

அது சமயம் ஆலோசனைக் கூட்டத்திற்கு மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி தொகுதிக்கு துணை முதல்வர் அவர்களின் வருகை குறித்து.

2. துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாள் குறித்து.

3. (SIR) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு பணிகள் குறித்து.

4. 11.11.2025 அன்று (SIR) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு குறித்து கண்டன ஆர்ப்பாட்டம்.

5. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

